தேர்தலை வென்று மீண்டும் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வராகப் பொறுப்பேற்கவிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, அவருக்கு உறுதுணையாக நிற்கும் மாண்புமிகு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை மாவட்டத்தில் A.E.O. *அலுவலகங்கள் பெரும்பாலான இடங்களில் இல்லை. பாடப் புத்தகம், காலணி, சீருடைகள் ஆகியவற்றை இருப்பு வைத்து பாதுகாப்பாக வைத்துக்கொள்ள அந்த அலுவலகங்கள் அவசியம் வேண்டும். எனவே, அங்கே* A.E.O. *அலுவலகம் கட்டுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் உள்ள பள்ளிகளில் வகுப்பறைகள் காலியாக இருக்கின்றன. அதற்கேற்ப A.E.O. அலுவலகத்தை அங்கு மாற்றி அமைப்பதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

நியாய விலைக் கடை

***58171—திரு. எ. ராமர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், பேத்தரவுத்தன்பட்டி ஊராட்சி, குள்ளம்பட்டியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தன் இறுதிக் காலம் வரை வாழ்ந்து, தமிழக மக்களுடைய நலனுக்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி இன்றைக்கு தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்றிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, உலகத்தின் எந்த தலைவனுக்கும் எடுத்திராத நினைவுச் சின்னத்தை உருவாக்கியும், அவர் வாழ்ந்த வேதா இல்லத்தை அரசு இல்லமாக மாற்றியும், அரசு நினைவிடமாக மாற்றியும், திருவுருவச் சிலை அமைத்தும், மக்கள் திலகம் மனிதப் புனிதர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நினைவிடத்தைப் புதுப்பித்தும் வரலாற்று சாதனை படைத்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். இன்றைக்கு உணவு தானிய உற்பத்தியில், உலகத் தரமான கல்வியில், சுகாதாரம் பேணுவதில், சுற்றுலா மேம்பாட்டில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் மட்டுமின்றி, கொரோனா காலத்திலும் அதிக முதலீடுகளையும் பெற்றுத் தந்தது; நிருவாக மேலாண்மையிலும், நீர் மேலாண்மையிலும் இந்தியாவின் No. 1 மாநிலம் தமிழகம் என்ற பெருமையைப் பெற்றது, இப்படி அனைத்திலும் அன்னைத் தமிழ் பூமிதான் முதலிடம் என்பதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் எங்கள் அண்ணன், தன்னிகரில்லா முதல்வர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கும், உக்கிர எதிர்ப்பை எல்லாம் ஒற்றைச் சிரிப்பாலே ஓடவிட்டு, வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, ஐயங்கள் கிளப்புவோர் எல்லாம் வெட்கித் தலை குனிய அம்மாவின் பிள்ளைகள் நாங்கள் என அசத்திக் காட்டி வரும் தென்பாண்டித் தங்கம், எங்கள் அண்ணன் மாண்புமிகு ஓ.பி.எஸ். அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10–20

(அ) மற்றும் (ஆ) *கரூர் மாவட்டம், குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் வட்டம், பஞ்சப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், குள்ளம்பட்டி பகுதியிலுள்ள 143 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 760 குடும்ப அட்டைகளுடன் பேத்தரவுத்தன்பட்டி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமெனில், குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், 3–10–2020 முதல் குள்ளம்பட்டி பகுதியில் அம்மா நகரும்*

நியாய விலைக் கடை துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் எளிய முறையில் உணவுப் பொருட்களைப் பெறுவதற்காக கிராமங்கள்தோறும் நகரும் நியாய விலைக் கடைகளை அமைத்துத் தந்ததோடு, அந்த கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவக் கனவை நனவாக்குகின்ற விதமாக, 7.5 சதவீத உள் இட ஒதுக்கீட்டை வழங்கி, இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களும் மருத்துவக் கல்லூரிகளில் படித்து முன்னேறுவதற்கு வழிவகை செய்திருக்கிறார் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். அம்மாவின் கனவை நனவாக்குகின்ற விதமாக நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில், தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்று, மீண்டும் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்கவிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.*

பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பல்லடம் வட்டம், வாவிபாளையம் ஊராட்சி, கோசவம்பாளையம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, இதுவரை கூட்டுறவுத் துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு, கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் முழுநேர நியாய விலைக் கடைகள் 689, பகுதிநேர நியாய*

2021 பிப்ரவரி 4]

விலைக் கடைகள் 1,798 என மொத்தம் 2,487 நியாய விலைக் கடைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசியல் வாரிசாக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய புரட்சிகரமான அறிவிப்புகளின்மூலம், 3,501 அம்மா நகரும் நியாய விலைக் கடைகளைத் திறந்து வைத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, விரைவாக நிறைவேற்றுவதற்கு துறைரீதியாக ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்கிற தாரக மந்திரத்தோடு வாழ்ந்து, அமைதி, வளம், வளர்ச்சி என்ற நிலையில் தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றுவிட்டு, இன்றைக்கு நம்மிடத்திலிருந்து பிரிந்து சென்றாலும், மக்கள் மனதில் என்றைக்கும் நீங்கா இடம்பெற்றிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, எட்டாவது வள்ளலாக வாழ்ந்து மறைந்திருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தெய்வத்தையும் வணங்குகிறேன். அந்த இரு பெரும் தெய்வங்கள் எப்படி இந்த நாட்டு மக்களுக்காக, ஏழை, எளிய மக்களுக்காக திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வாழ்ந்தார்களோ, அதில் கொஞ்சம்கூட தடம் புரளாமல், தினந்தோறும் உழைத்து, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இன்றைக்குப் பல்வேறு திட்டங்களைத் தந்ததோடு, எனது சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மலைவாழ் மக்களின் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து, அவர்களிடத்தில் சேந்தமங்கலம் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்துள்ளார்கள். தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்பட்டு, வருகின்ற 2021 ஆம் ஆண்டு மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்கவுள்ள நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு*

உறுதுணையாக நின்று பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தை மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டுமென்ற அம்மா அவர்கள் கண்ட

கனவை நிறைவேற்றி, உழைத்துக் கொண்டிருக்கின்ற எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–25

கூட்டுறவுத் துறையின் மூலமாக நகரும் நியாய விலைக் கடைகள் அமைத்ததற்கும், கொல்லிமலையில், தெம்பலம் என்னுமிடத்தில் புதிய LAMP Co–operative Society *அமைத்ததற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நகரும் நியாய விலைக் கடைகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அதிலே முழுநேரக் கடைகள், பகுதிநேரக் கடைகள் என்ற வகையில் 15–க்கும் மேற்பட்ட கடைகள் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் மூலமாக இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், இன்றைக்கு அந்தப் பகுதிநேர நியாய விலைக் கடை என்று சொல்லக்கூடிய சில கடைகளைத் திறக்க அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள அந்த முன்மொழிவுகளுக்கு நீங்கள் அனுமதியைப் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, எருமைப்பட்டி வட்டாரத்தில் அமைந்திருக்கின்ற பெருமாபட்டி என்ற அந்தக் கடையிலிருந்து ஈச்சவாரி என்ற பகுதியிலும், அதேபோல, எருமைப்பட்டி பகுதி, ரெட்டிப்பட்டியில் அமைந்துள்ள அண்ணா நகர், கந்தபுரி ஆகிய பகுதிகளிலும், பொட்டிரெட்டிப்பட்டி என்ற பகுதியிலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சார்பாக கெஜகொம்பை என்ற பகுதியிலும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டும். மேலும், கொல்லிமலை,* Powerkadu Hill Tribes Lamp Co–operative Society*–யின் மூலமாக வடகாடு பகுதியிலும்– இதெல்லாம் மலைப்பகுதி–*Powerkadu, *செம்மேடு* Lamp Co–operative Society*–யின் மூலமாக கடபலம்பட்டி பகுதியிலும் திறக்கப்பட வேண்டும். நடுக்கோம்பை பகுதியிலிருந்து, கீழ்செங்காடு மலையடிவாரம் வரை மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதிகளில் இன்றைக்கு பகுதிநேர நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளாக இருப்பதால், அதற்கு அனுமதியைப்*

2021 பிப்ரவரி 4]

பெற்றுத்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, ஒரு பகுதிநேரக் கடையைத் திறக்க வேண்டுமானால், மலைக் கிராமமாக இருந்தால், குறைந்தபட்சம் தாய்க் கடையில் 400 கார்டுகளும், உத்தேசிக்கப்பட்ட பகுதிநேர நியாய விலைக் கடையில் 100 கார்டுகளும் இருக்க வேண்டுமென்பது சட்ட விதி. அதேபோன்று, நிலப் பகுதி; கிராமப்புறப் பகுதிகளில், பிரித்த கடையில் 150 கார்டுகளும், தாய்க் கடையில் 500 கார்டுகளும் இருக்க வேண்டுமென்பது விதி. எனவே, இதுபோன்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, துறையினுடைய அலுவலர்கள் மூலமாக உணவுத் துறையில் அந்த* file *எங்கிருக்கின்றது என்பதைத் தெரிந்துகொண்டு கூட்டுறவுத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி இல்லாதபட்சத்தில் நகரும் நியாய விலைக் கடைகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற கோரிக்கைகள் நிறைய இடங்களிலிருந்து வருகின்றன. இதற்காகத்தான் வரலாற்றிலே எப்போதும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு இந்தியாவிலே, தமிழகத்தில் மட்டும்தான், 3,501 அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்று கிடையாது. மேலும், நம்முடைய உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியிலிருந்து இதுதொடர்பான கோரிக்கைகள் வரும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, இதுகுறித்த கோப்புகளில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அறிவுரைகளையும் கேட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, இதுபோன்ற கடைகளையெல்லாம் நகரும் நியாய விலைக் கடைகளாகத் திறப்பதற்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*